கோரிக்கைகள் தொழிலாளர் நல அலுவலரிடம் விசாரணையில் உள்ளது. 2 கோரிக்கைகளுக்கு தேவைப்படுகிற விவரங்கள் முழுமையாக இல்லாத காரணத்தால், மேலும் விவரங்கள் வேண்டுமென்று கோரப்பட்டு இருக்கிறது. அதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை. ஆனாலும் நேற்று தொழிலாளர்களும் நிர்வாகமும் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு உடன்பாடு ஏற்பட்டு, இன்றைக்கு வேலைக்குத் திரும்பிக் கொண்டு இருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் உறுப்பினர் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத் தாள்களை 8-5-1990 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் 9-5-1990 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும், விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 10-5-1990 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 12-5-1990 சனிகிழமைக் காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(10-05 மணி)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஈ) இராமேஸ்வரம் வெர்க்கோடு மீனவர் சங்கத்தின் சார்பாக தூதுக் குழுவினர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த இலங்கை செல்ல அனுமதி பெறுவது குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இராமேஸ்வரம் வெர்க்கோடு மீனவர்கள் சங்கத்தினுடைய சார்பில் ஒரு தூதுக்குழு இலங்கை தலைமன்னாருக்குச் செல்லப்போவதாக இன்று செய்தி வந்துள்ளது. அந்த அமைப்பே இந்தச் செய்தியினை பத்திரிக்கையாளரிடம் தெரிவித்திருக்கிறது. அவர்கள்